6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. அம்பத்தூர் பால் உற்பத்தி நிலையத்தில் ஒட்டுமொத்த அடிப்படையில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பனிக்கூழ் தொழிற்சாலையின் கட்டுமானம், வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் சோதனை மற்றும் துவக்குதல் பணிகளை திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திற்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 3-12-2013 ஆம் நாளிட்ட 446 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. ஈரோட்டில் ஒட்டுமொத்த அடிப்படையில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கால்நடை தீவனத் தொழிற்சாலையின் கட்டுமானம், வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் சோதனை மற்றும் துவக்குதல் பணிகளை திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திற்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 3-12-2013 ஆம் நாளிட்ட 447 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

28. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட சென்னையில் உள்ள ஐந்து பாரம்பரிய நீதிமன்ற கட்டடங்களை பாதுகாத்து சீரமைத்திடும் பணியினை புதுதில்லியில் உள்ள இந்திய தேசிய கலை, பண்பாட்டு பாரம்பரிய அறக்கட்டளைக்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 21-1-2014 ஆம் நாளிட்ட 17 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

29. பெரம்பலூரில் ஒட்டுமொத்த அடிப்படையில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடைய புதிய பால் பண்ணை அமைக்கும் பணியினை திருவாளர்கள் தேசிய பால் வளர்ச்சி வாரியத்திற்கு வழங்குவது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 21-1-2014 ஆம் நாளிட்ட 18 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

30. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

31. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

32. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

33. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தணிக்கை அறிக்கை. [1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

16. மனுக்கள் குழுவின் முப்பத்து ஆறாவது அறிக்கை. (2013-2014)

17. மனுக்கள் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2013-2014)

18. மனுக்கள் குழுவின் முப்பத்து எட்டாவது அறிக்கை. (2013-2014)

19. மனுக்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2013-2014)